IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.51/2019
DEPOSITION OF WITNESS

பி.வா.சா.2 சாட்சி செல்வபெருமாள் த.பெ.வெங்கடசாமி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 10.04.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் தற்போது சென்னையில் இருந்து வருகிறேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எனக்கு அண்ணன், எனது தகப்பனாருக்கு மூத்த மனைவியின் மகன் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி என்னுடைய தாயார் என்றால் சரிதான். எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு எனது வழக்கறிஞருக்கு விபரம் சொன்னது யார் என்றால் பிரதிவாதிகள் அனைவரும் சொன்னோம். வழக்கு ஆரம்பத்திலிருந்து நீதிமன்றத்திற்கு வந்தது இல்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கு தாக்கல் செய்த காலத்தில் சேர்ந்துதான் வழக்கை நடத்தினோம் என்றால் சரிதான். நான் மதுரை மாவட்ட வருவாய் அலுவல வசம் வழக்கு நடந்தது வரை இருவரும் சேர்ந்து நடத்தினோம், இந்த நீதிமன்றத்திற்கு வந்த பின்னர் இருவருக்கும் சுமுகமான பேச்சுவார்த்தை இல்லை என்றால் எனது அண்ணன் இந்த வழக்கை நீ பார்த்துக்கொள் என்று கூறிவிட்டார்.

2. தாவா சொத்தை தவிர எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை நாங்கள் பாகம் பிரித்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். வழக்கின் சர்வே எண் தெரியுமா என்றால் சரிவே எண். 104/5 ஆகும். அதன் விஸ்தீரணம் சுமாராக தென்வடல் 170 அடி, கிழமேலாக 36 என்றால் சரிதான்.

சர்வே எண். 104/5 என்பது வாதி பால்ராஜ் என்பவரின் முன்னோருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பற்றி தெரிந்துக்கொண்டேனா என்றால் ஒரளவுக்கு தெரியும். எனக்கு மேற்படி சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால் 1963 ம் ஆண்டு எனது தகப்பனாருக்கு கிரைய பாத்தியப்பட்டது. மேற்படி கிரைய பத்திரத்தின் அசல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் அசல் பத்திரம் தொலைந்துவிட்டது. மேற்படி அசல் பத்திரம் தொலைந்துவிட்டதை நான் என்னுடைய எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. பி.வா.சா.ஆ 3 ஆவணமானது படிக்க கூடிய நிலையில் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 3 ல் தாவா சொத்து எங்கு உள்ளது என்று குறிப்பிட்டு பி.வா.சா.ஆ. 3 ஐ பார்த்து சொல்ல இயலாது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே வாதியின் பெயரில்தான் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான், அது தவறாக வழங்கப்பட்டது. வாதி குடும்பத்தில் அவருடைய பாட்டனாரும் அவரது சகோதரியின் மகள் சுப்பம்மாளும் 23.02.1963ம் தேதி ஒரு பதிவு பாகபிரிவினை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டார்கள், சர்வே எண். 104/5 ன் பட்டா எண். 324 விஸ்தீரணம் 18 செண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. 23.02.1963 ல் தாவா சொத்து வாதி குடும்பத்திற்கு பாத்தியப்பட்டு பாகபிரிவினை செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி பாகபிரிவினைக்கு பின்னிட்டுதான் 21.11.1963ம் தேதியிட்ட கிரைய ஆவணம் ஏற்பட்டுத்தப்பட்டது என்றால் சரிதான். வாதி குடும்பத்திற்கு தாவா சொத்தினை கிரையம் கொடுக்க வேறு நபர்களுக்கு உரிமை கிடையாது

என்றால் சரியல்ல. எனது தகப்பனார் வாங்கிய கிரைய பத்திரத்தில் பட்டா எண். 325 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, 324 என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. எனது தகப்பனாருக்கு கிரையம் பெற்றது சர்வே எண். 104/4 ல்தான் உரிமையுள்ளது என்றால் சரியல்ல.

5. எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலம் வரை அவர் அனுபவித்து வந்ததற்கு கிஸ்தி செலுத்தியத்தற்கான இரசீதை தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. நாங்கள் தாக்கல் செய்துள்ள வரி இரசீதுகள் இந்த வழக்கிற்கு பின்புதான் பெறப்பட்டது என்றால் சரிதான். வாதிதான் தாவா சொத்து தன்னுடைய அனுபவத்தில் இருப்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்கு முற்பட்டவை என்றும் நீங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு பின்பானது என்பதால் ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்றால் சரியல்ல. வாதிக்கு தாவா சொத்தை தவிர நடுக்கோட்டை கிராமத்தில் பல சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ 3 பட்டா எண். 687 ல் வாதி பெயருக்கு தாவா சொத்துக்கள் உட்பட பல சொத்துக்களுக்கு 1987 ல் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. இந்த வழக்கில் தாவா சொத்தில் வாதிகளுக்கு பாத்தியம் இருக்கிறது என்று தெரிந்திருந்தும் எனக்கு பாத்தியமில்லை என தெரிந்திருந்தும் வீண் எதிர் வியாஜியம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதி கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.10 12:47:46 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.